30th March 1966]

சலுகைகள் அளிக்க வேண்டும் எனக்கோரி விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) ஆம்.

(இ) கல்லூரிகளில், 1965-66, 1966-67-ம் ஆண்டுகளில் பி.ஏ. பட்டப்படிப்பைத் தமிழில் படிக்கும் மாணவர்களின் நலனை முன்னிட்டு முழுச் சம்பளச் சலுகைகள், பயிற்சி உதவிப் பணம் (Stipend) வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கு அரசாங்கம் அனுமதி அளித்துள்ளது.

State Educational Survey

* 539 *Q.*—SRI V. SANKARAN :
SRI T. P. ALAGAMUTHU :
SRI C. CHIRANJEEVULU NAIDU : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government have proposed to conduct any State Educational Survey ; and

(*b*) if so, the details thereof and the benefits expected to accrue therefrom ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) Yes.

(*b*) The Government have decided to participate in the Second All-India Educational Survey conducted under the auspices of the National Council of Educational Research and Training. They have set up a State Educational Survey Unit. The object of this Survey is to make the information collected by the First All-India Educational Survey (1957) up-to-date. The adequacy of the existing facilities at the primary and the secondary level is proposed to be assessed and a plan for the future covering these sectors is likely to be evolved as a result of this Survey.

திரு. வை. சங்கரன் : இதுவரைக்கும் எவ்வளவு வேலைகள் முடிவடைந்திருக்கின்றன ? முற்றிலும் முடிவதற்கு எத்துணைக் காலம் ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அதைப்பற்றித் தனிக் கேள்வி வேண்டும்.

SRI C. CHIRANJEEVULU NAIDU : Sir, may I know who are the officers entrusted with the work of collecting these particulars at the level of the District Educational Officer?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : டெப்யூடி இன்ஸ்பெக்டர் கிரேடில் ஒவ்வொரு எஜுகேஷன் மாவட்டத்திற்கும் நியமிக்கப் படுகிறார்கள். அவர்கள் ஜில்லா கல்வி அதிகாரியினுடைய காரியாலயத்தில் வேலை செய்வார்கள். ஜில்லா கல்வி அதிகாரிகள் இதையெல்லாம் மேற்பார்வையிடுவார்கள்.